06

# யாழ்ப்பாண மக்கள் மத்தியில் ஊடக விளங்கறிவு : கொரோனா காலத்தில் போலிச்செய்திகள் நுகர்வை அடிப்படையாகக் கொண்ட அவதானிப்பு

பூங்குழலி ஸ்ரீசங்கீர்த்தனன்


## ஆய்வுச் சுருக்கம்

தொழில்நுட்ப வளர்ச்சியினைத் தொடர்ந்து மக்கள் ஊடகத்தினை நுகர்வதென்பது இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. மக்கள் தமது அறிவுத் தேவையை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு அச்சு, இலத்திரனியல், புதிய மற்றும் சமூக ஊடகங்கள் என அனைத்தினையும் நுகர்ந்து கொள்வதனை அவதானிக்க முடியும். இந்நிலையில், கொரோனா பெருந்தொற்றுக் காலங்களில் வழமைக்கு மாறாக உலகளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் முடக்கங்கள் ஏற்பட்டதனைத் தொடர்ந்து மக்கள் மற்றைய ஊடகங்களை விடவும் சமூக ஊடகங்களை மட்டுமே முற்றுமுழுதாக நம்பியிருந்த நிலையினையும் அவதானிக்க முடியும். எனவே, இவ்வாறான காலப்பகுதியில் சமூக ஊடகங்களை நுகருகின்ற யாழ்ப்பாண சமூக மக்கள் மத்தியில் ஊடக விளங்கறிவு போதுமானதளவில் காணப்படுகின்றதா என்பதனைக் கண்டறிவதே இவ் ஆய்வின் பிரதானமான நோக்கமாகக் காணப்படுகின்றது. ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியாக 2020 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான ஒரு வருடமும் மற்றும் 2021 ஆம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஜுன் மாதம் வரையான ஆறு மாதங்கள் என பதினெட்டு மாதங்கள் வரையறைக்குட்படுத்தப்பட்டு, ஆய்வுக்கான கருவியாக அவதானிப்பு பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்து மக்கள் மத்தியில் கொரோனா பெருந்தொற்றுத் தொடர்பான அறிமுகம், தொற்று ஏற்படும் விதம், தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க கையாள வேண்டிய வழிமுறைகள், தொற்றுக்காக வழங்கப்படும் தடுப்பூசி பற்றிய விபரங்கள், பயணக்கட்டுப்பாடுகள் தொடர்பான மக்களின் தகவலறிவை அறியும் பொருட்டு, நுகரப்பட்ட சமூக ஊடகங்களான முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வைபர் (Viber) மற்றும் வலையொளி (YouTube), வலைப்பூ (Blog), கீச்சகம் (Twitter) வழியாகப் பெறப்பட்ட தரவுகள் ஆய்வாளரால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. ஆய்வுக்கான கருத்தியலின் அடிப்படையில் ஊடகப் பெறுநர்கள் - ஆதிக்கப் பெறுநர்கள் (Dominant Readers), பேச்சுவார்த்தைக்குட்பட்ட பெறுநர்கள் (Negotiated Readers), எதிர்ப்புப் பெறுநர்கள் (Oppositional Readers) என்ற வகைப்பாட்டின் கீழ் வகைக்குட்படுத்தப்பட்டனர். அவ்வாறான கருதுகோளினை மையமாகக் கொண்டு பெறுநர்களை

ஆய்வுக்குட்படுத்தும்போது சமூக ஊடகங்களை நுகர்ந்த பெரும்பாலான மக்கள் தாம் பெற்றுக் கொண்ட செய்தியானது எங்கிருந்து வருகின்றது, எவ்வாறு வருகின்றது என்பவை தொடர்பிலும், பகிரப்படும் புகைப்படங்கள், காணொளிகள் தொடர்பில் உண்மைத்தன்மையினை விமர்சனரீதியிலான ஆய்வுக்குட்படுத்தாமல் அனைத்துச் செய்திகளும் தரவுகளும் உண்மைத்தன்மையானவை என்ற ரீதியில் ஆதிக்கப் பெறுநர்களாகக் காணப்படுகின்றனர். மற்றும் சில பெறுநர்கள், ஊடகங்களிலிருந்து பெறப்படும் தரவுகளைப் பகுதியளவில் ஏற்றுக் கொள்வதுடன் பேச்சுவார்த்தைக்குட்படுத்தப்படும் பெறுநர்களாகவும், வேறும் சில பெறுநர்கள் அனைத்தினையும் விமர்சனரீதியிலான ஆழ்ந்த ஆய்வுக்குட்படுத்தி, சில சந்தர்ப்பங்களில் எந்தவொரு ஊடகச் செய்தியினையும் நம்பமறுத்து, ஊடகத்தினை நம்பிக்கைக்கு அப்பால் தள்ளிவைத்து, எதிர்ப்புநிலைப் பெறுநர்களாகவும் காணப்படுகிறார்கள் என ஆய்வாளரால் இனங்காணப்பட்டது. எனவே, பெரும்பாலும் யாழ்ப்பாணத்துச் சமூக மக்கள் மத்தியில் ஊடகங்களிலிருந்து வரும் குறிப்பாக சமூக ஊடகங்களிலிருந்து வரும் செய்திகளை அவற்றின் உண்மைத்தன்மை குறித்து ஆராய்வதில் அவர்களிடம் ஊடக விளங்கறிவானது போதுமானதளவில் காணப்படவில்லை என்பதுடன், வெளிவருகின்ற / பகிரப்படுகின்ற போலிச் செய்திகளையும் அவற்றின் உண்மைத்தன்மைகளை அறியாது அவ்வாறே ஏற்றுக் கொள்ளும் தன்மையும் இனங்காணப்பட்டதாக அறியப்பட்டது. அத்துடன், இவ்வாறான போலிச் செய்திகளை உள்ளவாறே ஏற்றுக் கொள்வதனால் மக்கள் தமது அன்றாட வாழ்வியலில் மன அழுத்தம், அதிக பயம், உறவுகளிலிருந்து விடுபடல், நம்பிக்கையின்மை போன்ற பல சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய தேவையேற்பட்டுள்ளது எனவும் கண்டறியப்பட்டது.

## 1. அறிமுகம்

இன்றைய சூழலில் மக்கள் ஊடகத்தினை நுகர்வதென்பது இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. அதாவது அச்சு, இலத்திரனியல், சமூக மற்றும் புதிய ஊடகங்கள் என பலதரப்பட்ட ஊடகங்களை ஊடகப் பெறுநர்கள் தமது அறிவை விருத்தி செய்து கொள்ளவும், தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும், பொழுதுபோக்கிற்காகவும் அன்றாடம் நுகர்ந்து கொள்வதனை வழமையாகக் கொண்டுள்ளனர். அவ்வாறு ஊடகங்களை நுகர்ந்து கொள்ளும் அனைத்துப் பெறுநர்களும் ஊடக விளங்கறிவு என்பதனைத் தம்மகத்தே கொண்டுள்ளனரா என்பதனை அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

அவ்வகையில், ஊடக விளங்கறிவு என்பது, வெகுசன ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்படும் வெவ்வேறு தகவல்களை வாசித்து விளங்கிக் கொள்வதற்கும் அவற்றைப் பயன்படுத்துவதற்குமான ஆற்றல், தேர்ச்சி மற்றும் அறிவு ஆகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துப்படி "ஊடக விளங்கறிவு என்பது, ஊடகத்தால் முன்வைக்கப்படும் தகவல்களை நுகரவும், பகுப்பாய்வு செய்யவும், மதிப்பிடவும், படைப்பாக்கம் செய்யவும் பெற்றுக் கொள்ளும் ஆற்றல்" என்பதாகும்.

இவ்வாறு காணப்படுகின்ற ஊடக விளங்கறிவின் பணிகளாக உரிய குறியீடுகளைப் பயன்படுத்தித் தகவல்களை உருவாக்குவதும், அவற்றை ஒலி-ஒளிபரப்புச் செய்வதும், அவ்வாறு ஒலி-ஒளிபரப்பப்படும் தகவல்களை மீளப் பொருட்கோடல் செய்வதும் அடையாளங் காணப்படுகின்றன. இவ்வாறான ஊடக விளங்கறிவு குறித்து நோக்கும்போது பெறுநர் கோட்பாடு பற்றி குறிப்பிடுவதும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. ஸ்ருவர்ட் ஹோல் (Stuart Hall) என்பவரினால் 1973ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட கோட்பாடே பெறுநர் கோட்பாடாகும். இக்கோட்பாடானது, ஊடக உள்ளடக்கங்களை தயாரித்து ஒலி/ஒளிபரப்பப்படும்போது அவற்றை நுகரும் நுகர்வோர் தமக்குரிய

அறிவு விளக்கத்தின் அடிப்படையிலும் தத்தமது சமூகப் பின்னணியின் அடிப்படையிலும் அதனை நுகர்ந்து கொள்கின்றனர் என்பதாக அமைகிறது. அதாவது ஊடக உள்ளடக்கத் தயாரிப்பாளர்கள் தமது செய்திகளை குறிமுறையாக்கம் (Encoding) செய்து ஊடகப் பெறுநர்களுக்காக வழங்கும்போது, அதனை ஒவ்வொரு பெறுநர்களும் தமக்கேற்ற விதத்தில் குறிமுறையவிழ்ப்புச் செய்து (Decoding) விளங்கிக் கொள்கின்றனர். அதனைத் தொடர்ந்து ஸ்ருவர்ட் ஹோலின் கருத்துப்படி, ஊடகத்தினை நுகரும் பெறுநர்களை பெறுநர் கோட்பாட்டின் ஊடாக பின்வருமாறு மூன்று வகையாக வகைப்பிரிக்கலாம். அவ்வகையில் ஆதிக்கப் பெறுநர்கள் (Dominant Readers) என்பவர்கள் ஊடகத்தின் மூலம் தாம் நுகர்ந்து கொள்கின்ற அனைத்தினையும் முற்று முழுதாக ஏற்றுக் கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர். பேச்சுவார்த்தைக்குட்பட்ட பெறுநர்கள் (Negotiated Readers) எனும்போது, ஊடகங்களின் மூலம் வழங்கப்படும் தகவல்களை பகுதியளவில் ஏற்றுக்கொண்டு மற்றைய ஊடகப் பெறுநர்களுடனோ, ஊடக விமர்சகர்களுடனோ கலந்துரையாடுவதன் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொள்வர். எதிர்ப்பு பெறுநர்கள் (Oppositional Readers) எனும்போது, ஊடகத்திலிருந்து வழங்கப்படும் தகவல்களை ஏற்றுக் கொள்ளாமல் முற்றுமுழுதாக அவற்றினை நிராகரிப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஊடக விளங்கறிவில் மூன்று முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன. அதாவது, ஊடக விளங்கறிவு கட்டியெழுப்பப்படுவது, தனிப்பட்ட அவதானம் (Personal Focus), அறிவுக் கட்டமைப்பு (Knowledge Structure) மற்றும் திறன்கள் (Skills) என்பவற்றினூடாகவாகும். ஊடகங்கள் பற்றிய மனிதர்களின் அறிவை விஸ்தரிப்பதற்கு மிகவும் அவசியமாக விளங்குவது ஒருவரது தனிப்பட்ட அவதானம் ஆகும். இங்கு தனிப்பட்ட அவதானம் என்பது, ஒருவரது சக்தியையும் திட்டமிடலையும் பயன்படுத்தி மேற்கொள்வதாகும். இதற்கு அவசியமான மூலப்பொருட்கள் மூலம் மதிநுட்பக் கட்டமைப்பு உருவாக்கப்படும். ஆற்றல் அல்லது தேர்ச்சி இதற்குத் துணையான கருவியாகப் பயன்படுத்தப்படும். ஊடக விளங்கறிவு எனும்போது பல துறைகளிலிருந்தும் அறிவைப் பெற்றுக்கொள்வது பற்றிக் கலந்துரையாடப்பட வேண்டும். அதாவது, ஊடகத் தாக்கம், ஊடக உள்ளடக்கம், ஊடகக் கைத்தொழில், வியாபாரப் பணிகள், மற்றும் நிஜ உலகில் நிகழும் செயற்பாடுகள் ஆகியன பற்றி அறியப்படவேண்டும். இத்துறைகள் மூலம் தகவல் உருவாக்கப்படும் முறைபற்றி அறிந்து கொள்வதன் மூலம், தகவலைச் சரியான முறையில் மதிப்பிட்டுச் சரியான தீர்மானங்களையும் மேற்கொள்ளும் ஆற்றல் ஒருவருக்குக் கிடைக்கும். மேலும், ஊடகத் திறன்களாக - ஊடக ஆய்வு (Analysis), ஊடக மதிப்பீடு (Evaluation), குழுக்களாகப் பிரித்தல் (Grouping), தொகுத்தறிதல் (Induction), உய்த்தறிதல் (Deduction), தொகுப்பாக்குதல் (Synthesis), தேவையற்றவற்றைப் புறம்தள்ளுதல் (Abstraction) என்பவை காணப்படுகின்றன.

ஊடக விளங்கறிவானது அனைவருக்கும் காணப்படவேண்டிய ஒரு திறனாகக் கருதப்படுகின்றது. இலங்கையில் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம், எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 97.7 சதவீதமானதாகக் காணப்படுகின்றது. ஊடக விளங்கறிவானது இலங்கையில் குடிசனக் கல்வியில் காத்திரமானதொரு விடயமாகத் திகழ்வது முக்கியமானதென யுனெஸ்கோ, ஐ.பீ.டீ.சீ. ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளர் விஜயானந்த ஜயவீர தெரிவிக்கின்றார். இலங்கையில் ஊடகக் கல்வியானது மோசமான நிலையில் காணப்படுவதாக நம்பப்படுகிறது. ஏனெனில், இது தொடர்பில் தேசிய கொள்கையொன்று இதுவரை இருக்கவில்லை. ஊடகங்கள் தொடர்பான கரிசனை என்பது, ஊடகத் துறையின் தேவைகளை மையப்படுத்தியதாகவே காணப்படுகிறது. நாட்டின் தேவைகளை உள்ளடக்கியதாக அது காணப்படவில்லை.

ஊடக விளங்கறிவு பல கோணங்களைக் கொண்டது (Multi-Dimensional). அதில் பயனுறுதியுடைய பல முகங்கள் காணப்படுகின்றன. அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களை

உணர்ந்துகொள்ள நாம் பல்வேறு நிலைநோக்குத் தொகுதிகளுக்கூடாக அவற்றை அணுக வேண்டும். மேலும், ஊடக விளங்கறிவு தொடர்ச்சியான ஒன்றாகக் காணப்படுகின்றது.

மக்கள் ஊடக உள்ளடக்கங்களை எவ்வாறு விளங்கிக் கொள்கின்றார்கள் மற்றும் ஊடகங்களால் வழங்கப்படும் தகவல்களை எவ்வாறு தர்க்கரீதியான விமர்சனங்களுக்கு உட்படுத்துகின்றார்கள் என்பது பற்றி நோக்கும்போது, போலிச் செய்திகள் ஏன் பரப்பப்படுகின்றன, அவை எவ்வாறு பரப்பப்படுகின்றன என்பது தொடர்பில் நோக்குதல் அவசியமாகின்றது. போலிச் செய்திகள் என்று எடுத்துக்கொள்ளும்போது - தவறான தகவல்கள் (Misinformation), திட்டமிட்டுப் பரப்பப்படும் தவறான / பிழையான தகவல்கள் (Disinformation), மற்றும் தீங்கான தகவல்கள் (Malinformation) என்பவை குறித்தறிதல் அவசியமாகின்றது. தவறான தகவல்கள் எனும்போது துல்லியமற்றதும், தவறான வழிகாட்டுதலை மேற்கொள்ளக்கூடிய வகையில் பரப்பப்படும் தகவல்களாகும். ஆனால், இவை ஏமாற்றும் நோக்கத்துடன் பரப்பப்படும் தகவல்களாக அமையாது. மாறாக திட்டமிட்டுப் பரப்பப்படும் பிழையான தகவல்கள் எனும்போது அவை துல்லியமற்றவையாகக் காணப்படுவதுடன், பிழையான தரவு மற்றும் தகவல் என அறிந்தும் ஏமாற்றும் நோக்கத்துடனும் தவறான பிரச்சார நோக்கத்துடன் பரப்பப்படுபவையாகும். தீங்கான தகவல்கள் எனும்போது, அவை பொது ஆர்வத்துக்கான வெளியையும் கடந்து, தனிப்பட்ட பழிவாங்கல்களின் அடிப்படையில் ஒருவரைப் பற்றி மற்றைய ஒருவர் வெளிப்படுத்தும் எதிர்மறையான தகவல்களாகும். எனவே, சமூக ஊடகங்களினூடாக ஊடகங்களை நுகரும்போது இவ்வாறான செய்திகள் குறித்து அவதானம் செலுத்துவதுடன் ஆய்வுக்கும் உட்படுத்துவது சாலச்சிறந்ததொன்றாகும்.

அவ்வகையில், போலிச் செய்திகளை எவ்வாறு அடையாளங் காண்பது என்பது தொடர்பில் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. அதாவது, செய்தி மூலத்தைக் கருத்திற்கொள்ள வேண்டும். அதாவது செய்தி வெளியான சந்தர்ப்பத்தில், அது வெளியான செய்தித்தளம், அதன் நோக்கம் மற்றும் செய்தித் தளத்தினை எவ்வாறு தொடர்பு கொள்வது போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

செய்தியொன்றினை வாசித்த பின்னர், அது உண்மையான செய்திதானா என்பதனை அறிய அச்செய்தியினை எழுதியவர் யார் என்பதையும், அவர் உண்மையானவரா, நம்பகத்தன்மை உடையவரா என்பது தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும். முக்கியமாக, செய்தியாசிரியர் பற்றியறிந்திருத்தல் வேண்டும்.

பழைய செய்திகளை / சம்பவங்களை மீளவும் பிரசுரித்து தற்போது நிகழும் சம்பவம் போல் காட்ட சிலர் முனைவர். எனவே, நுகரும் தகவலின் திகதி மற்றும் நேரத்தை கருத்திற்கொள்ள வேண்டும். மேலும், அச்செய்தியுடன் தொடர்புடைய ஏனைய ஆதாரங்களைத் தேடுதல் வேண்டும். தலைப்புக்களை மட்டும் வாசித்து செய்திகளை அறியாமல் பூரணமாக வாசித்த பின்னர் ஆய்வுக்குட்படுத்தல் மற்றுமொரு பயனுள்ள வழியாகும்.

ஏற்றுக் கொள்ளமுடியாதது, உண்மைக்குப் புறம்பானது என ஒரு செய்தியை உணரும் பட்சத்தில், அது நகைச்சுவைக்காகவோ அல்லது கேளிக்கைக்காகவோ வெளியிடப்பட்டதா என இணையத்தளத்தினையும் எழுதியவரையும் தேடியறிவதன் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். குறித்தவொரு செய்தியை வாசிக்கும்போது, அதற்குத் துணைமூலமாக பகிரப்படும் செய்தியின் hyperlinkஐ அழுத்தி வழங்கப்பட்டுள்ள தகவலுக்கும் செய்திக்கும் தொடர்புள்ளதா என ஆராய்தல் முக்கியமாக அமைகின்றது.

அத்துடன், பகிரப்படும் காணொளி தொடர்பாகவும் அதன் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது காணொளியின் உண்மையான மூலத்தை மற்றும் உள்ளடக்கத்தைச் சரியாக அடையாளம் கண்டுகொண்டு உறுதிபடுத்த வேண்டும். தொடர்ந்து எழுப்பப்படும் கேள்விகளால் உண்மைத் தன்மையை அலசி ஆராயலாம். காணொளியைப் பதிவேற்றியவரின் பெயர், பதிவேற்றிய நேரம் குறித்து அறியவும், பதிவேற்றியது தனிநபரோ அல்லது நிறுவனமோ அவை வேறு சமூக ஊடகங்களுடன் தொடர்பிலுள்ளதா என ஆராய்தல், அவர்களின் கணக்கு மற்றும் இணைய முகவரி எவ்வளவு காலம் பாவனையிலுள்ளது என்பவை தொடர்பிலும் ஆராய்தல் வேண்டும்.

## 2. அவதானிப்புக்களும் கலந்துரையாடலும்

கொரோனா வைரஸானது 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று சீனாவிலுள்ள வூஹான் நகரத்திலிருந்து பரவத் தொடங்கியது. அன்றிலிருந்து உலக சுகாதார அமைப்பினால் தொற்றுநோயாக பிரகடனப்படுத்தப்பட்டதுடன், Covid–2019 எனவும் அழைக்கப்படலாயிற்று. ஒவ்வொரு நாடாக தனது ஆதிக்கத்தினைத் தொடங்கிய கொரோனா, இலங்கையில் தனது முதல் பதிவினை 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாவின் முதலாவது பதிவானது 22ஆம் திகதி மார்ச் மாதம் 2020 ஆம் ஆண்டில் பதிவாகியது. இவ்வாறு பரவத் தொடங்கிய கொரோனா தற்போது அடுத்தடுத்த அலைகளாகப் பரவிவரும் நேரத்தில், இவ் ஆய்வு எழுதப்படும் நாளில் (25.07.2021), நாடளாவிய ரீதியில் மொத்தமாக 294,850 கொரோனா தொற்றுக்கள் பதியப்பட்டுள்ளதுடன், 4054 இறப்புக்களும் மற்றும் தொற்றுக்குள்ளாகி மீண்டவர்களாக 266,665 பேரும் பதிவாகியுள்ளனர்.

இன்றைய சூழலில் கொரோனாவும் போலிச் செய்திகளும் மிக முக்கிய இடம் வகிக்கின்ற காரணத்தினால், ஆய்வாளரின் பிரதான நோக்கமாக, இவ்வாறான காலப்பகுதியில் சமூக ஊடகங்களை அதிகம் நுகருகின்ற யாழ்ப்பாணச் சமூக மக்கள் மத்தியில் ஊடக விளங்கறிவு போதுமானதளவில் காணப்படுகின்றதா என்பதனை கண்டறிதல் அமைந்தது. அதற்காக, 2020 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான ஒரு வருடமும் மற்றும் இவ்வருடத்தின் ஜனவரி தொடக்கம் ஜீன் மாதம் வரையான ஆறு மாதங்கள் என பதினெட்டு மாதங்கள் வரையறைக்குட்படுத்தப்பட்டு, ஆய்வுக்கான கருவியாக அவதானிப்பு பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்து மக்கள் மத்தியில் கொரோனா பெருந்தொற்றுத் தொடர்பான அறிமுகம், தொற்று ஏற்படும் விதம், தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க கையாள வேண்டிய வழிமுறைகள், தொற்றுக்காக வழங்கப்படும் தடுப்பூசி பற்றிய விபரங்கள், பயணக்கட்டுப்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு ஆகிய செயற்பாட்டு வரையறைகள் ஐந்து வழங்கப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சமூக ஊடகங்களான முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வைபர் (Viber) மற்றும் வலையொளி (YouTube), வலைப்பூ (Blog), கீச்சகம் (Twitter) வழியாகப் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளரால் இந்த ஆய்வு முன்னகர்த்தப்பட்டது.

### 2.1 கொரோனா நோய் தொடர்பான அறிமுகத்தினை வழங்குவதில் போலிச் செய்திகள்

2020ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொரோனாத் தொற்று தொடர்பான அறிமுகம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில், இந்நோய் எந்நாட்டினை மூலமாகக் கொண்டு பரவத் தொடங்கியது,

திட்டமிட்ட பரப்புதலா மற்றும் நோய் தொடர்பான விவரணங்களை வழங்கியவை தொடர்பில் பலவிதமான உண்மையற்ற செய்திகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டமை ஆய்வாளரால் அவதானிக்கப்பட்டது.

தொற்றுத் தொடர்பில் ஆரம்ப காலங்களில் பரப்பப்பட்ட தகவல்களால் மக்கள் பீதியடைந்து பலவிதமான மனவுளைச்சல்களுக்கும் ஆளாகினர். நாடளாவிய ரீதியில் முடக்கம் ஏற்பட்டிருந்த வேளையில், அனைத்து வியாபார, வர்த்தகங்களும் இணைய வழியாக இடம்பெற்றபோது பகிரப்பட்ட தவறான கருத்துக்களால் யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு பகுதியினரான மக்கள் இணைய வழியிலான கொள்வனவுகளை மேற்கொண்டால், தொலைத்தொடர்புச் சேவைகளை அதாவது தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டால் கொரோனா தொற்று பரவும் என்ற நம்பிக்கையை தம்மகத்தே கொண்டு, அவற்றினால் பொருட் கொள்வனவு வாய்ப்புக்களைத் தவிர்த்து தம் அறியாமையை வெளிப்படுத்தியமையை அவதானிக்க முடிந்தது.

மேலும் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியைப் பின்பற்றுவது, தூய்மையைப் பேணுவது (பொதுவெளிகளில் கைகளால் தொடுவது) போன்ற அறிவுறுத்தல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டபோதும், சமூக ஊடகங்களில் இவற்றுக்கான மீம்ஸ்கள் நகைச்சுவையுணர்வினை ஏற்படுத்தும் வகையில் பகிரப்பட்டிருந்ததுடன், வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் பெரும்பாலானவை அனைத்து மக்களையும் சென்றடையாதிருந்தமையையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

### 2.2 தொற்று ஏற்படும் விதம் தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதில் போலிச் செய்திகள்

கொரோனா தொற்றுக்கான அறிகுறிகளாக காய்ச்சல், சுவை மற்றும் வாசனையை நுகர முடியாமை, தொடர் இருமல், வலி மற்றும் நோவுகள், கண்களிலுள்ள வெண்படலம் சிவப்பாகுதல், தொண்டை வலி, வயிற்றுப் போக்கு, கால் - கை விரல்களில் நிறம் மாறுதல், தலைவலி, தோலரிப்பு என்பன சுகாதார நிபுணர்களால் வரையறுத்துக் கூறப்பட்டபோதும், ஒவ்வொரு முறையும் நாட்டில் அதிகளவான தொற்றுக்கள் ஏற்படுகின்றபோது, இவ்வாறான அறிகுறிகளை ஹாஷ்டாக் (Hashtag) செய்து இவற்றுள் ஏதாவதொரு அல்லது மிகச்சில அறிகுறிகள் காணப்படுகின்றபோதே அது கொரோனாவுக்கான அறிகுறி என்ற விதத்தில் சமூக ஊடகங்கள் மூலமாகவும் மீம்ஸ்கள் மூலமாகவும் தகவல் பரப்புதல் மேற்கொள்ளப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

மேலும், காற்றினால் வைரஸ் பரவும் எனக் குறிப்பிடப்பட்ட காரணத்தினால் பெரும்பாலான மக்கள் விதிகளுக்கு வருவதற்கே சிந்திக்க ஆரம்பித்ததுடன், தொற்று ஏற்பட்டவர்களை தீண்டத்தகாதவர்கள் போல் நடத்தியதையும் அவதானிக்க முடிந்தது.

தமது கிராமத்தில் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டது எனச் சமூக ஊடகம் மூலம் அறியுமிடத்து, அத்தகவலையும் அது தொடர்பில் வரும் தரவுகளையும், மீம்ஸ்களையும் கண்டு சுகாதார அதிகாரிகளிடமிருந்து ஓடிஒளித்தல் முதலானவை இடம்பெற்றதனையும் அவதானிக்க முடிந்தது.

### 2.3 தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க கையாள வேண்டிய வழிமுறைகளை வழங்குவதில் போலிச் செய்திகள்

தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கும்பொருட்டு, சத்துக்கள் மற்றும் எதிர்ப்புச் சக்தி நிறைந்த மூலிகைப் பானம் குடிக்கலாம் என்ற செய்தியை அடித்தளமாகக் கொண்டு மக்களை

ஏமாற்றும்விதமாக பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர் ஒருவரிடம் சென்று அவரிடமிருந்து மூலிகைப் பானத்தினை வாங்கி அருந்துவதன் மூலம் கொரோனாவில் இருந்து விடுபடலாம் என்ற கருத்தினை சமூக ஊடகங்களில் அதிகமாக பகிர்ந்ததுடன், அவ்வாறான சுதேச வைத்தியர்களது வீட்டில் மக்கள் கூட்டங்கூட்டமாக நிற்கும் படங்கள் எனப் போலிச்செய்திகள் பரப்பப்பட்டு மக்கள் அவதிக்குள்ளானமையினை அவதானிக்க முடிந்தது.

மேலும், கொரோனாத் தொற்று ஏற்பட்டு மக்கள் கூட்டம் கூட்டமாக மயங்கி, இறந்து விழுவதாகவும், இவ்வாறான செயல் இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இடம்பெறுவதாகவும் காணொளியொன்று அதிகமாக முகப்புத்தகத்தில் பகிரப்பட்டு வந்தது. ஆனால், அக்காணொளியானது இந்தியாவில் கடந்த வருடத்தில் இடம்பெற்ற விபத்தொன்றின்போது மக்கள் மயங்கி விழுந்ததனையே சித்தரித்துக் காட்டியது. எனவே, பகிரப்பட்ட இக்காணொளி மற்றும் தகவல் பிழையானது என்பதோடு, மக்கள் மத்தியில் அதீத பயத்தினை உண்டு பண்ணும் நோக்கிலேயே இச் செய்தி பரப்பப்பட்டதும் மக்களால் உணரப்படமுடியாதிருந்தது.. இதனால், சாதாரண பொதுமக்கள் மத்தியில் கொரோனா தொடர்பில் பெரும் பீதி ஏற்படுத்தப்பட்டதுடன், இச்செய்தி உண்மைதான் என அறிவு சார்ந்தவர்களாலேயே சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டமையையும் அவதானிக்க முடிந்தது.

### 2.4 கொரோனா தடுப்பூசி பற்றிய செய்திகளை வெளியிட்டதில் போலிச் செய்திகள்

கொரோனாத் தடுப்பூசி பற்றி பலவகையான போலியான செய்திகள் பரிமாறப்பட்டதையும் பகிரப்பட்டதையும் ஆய்வுக் காலப்பகுதியில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. அவ்வகையில் கிழக்கு ஆபிரிக்காவில் Seychelles வாசிகள் கொரோனா தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்டதையும், அதிக இறப்பு நடந்ததையும் தொடர்ந்து - ரொய்ட்டேர்ஸ் (Reuters) நிறுவனத்தினால் வெளியிட்ட செய்திக்கட்டுரையில், கொரோனா தடுப்பூசிகளின் இரண்டு தொடர்களினையும் பெற்றுக் கொண்ட மக்கள் பாதிக்கப்பட்ட வீதம் குறைவானதாகவும், அவ்வாறு அவர்கள் பாதிக்கப்பட்டாலும் இறப்பு வீதம் மிகவும் குறைவான அளவிலேயே காணப்படுகின்றது என்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனமும் சுகாதார அமைச்சும் தரவு வெளியிட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வறிக்கையைச் சுட்டிக்காட்டி, லங்காதீப இணையச்செய்தியில் 13ஆம் திகதி மே மாதம் 2020 வெளியிடப்பட்ட செய்தியானது தவறான செய்தியாகவும், பொதுமக்களைத் தவறான கோணத்தில் வழிநடத்துவதாகவும் அமைந்திருந்தமையை அவதானிக்க கூடியதாகவிருந்தது. அவ்வகையில் லங்காதீப இணையச் செய்தியானது, இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்ட பெரும்பாலான Seychelles வாசிகள் கொரோனாத் தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என வெளிவந்து, தவறான தகவலைப் பரப்பியுள்ளமையும், அது யாழ்ப்பாணச் சமூக மக்களிடையேயும் சமூக ஊடகங்களின் வழியாகப் பரவியிருந்ததும் ஆய்வாளரால் அவதானிக்கப்பட்டது.

மேலும், அண்மைய காலங்களில் புலனத்தினூடாக (WhatsApp) 2021 ஜூன் மாதம் 11 ஆம் திகதியன்று, ஒரு தரவு / தகவலொன்று பரப்பப்பட்டிருந்தது. அதாவது, இலங்கையின் கொரோனாத் தொற்று இறப்பு எண்ணிக்கையானது அயல்நாடான இந்தியாவின் எண்ணிக்கையையும் அதன் வீதத்தினையும் கடந்து சென்றுகொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டியது. ஆனால், இவ்வாறான தரவுகளைப் பகிர்வதற்கு புள்ளிவிபரங்கள் முக்கியமானதொரு விடயமாகும். பகிரப்பட்ட புள்ளிவிபரத்தின்படி, இரண்டு நாடுகளினதும் கொரோனாத் தொற்று இறப்பு எண்ணிக்கை வீதம் சமமாகவே அறிக்கையளிக்கப்பட்டது. ஆனால், புள்ளிவிபரத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட தரவுகள் ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு ஏழு நாட்களுக்கொரு முறை அளவிடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டதனால், அத்தரவுகள் பொருத்தப்பாடின்மையை வெளிப்படுத்துவதனை ஆய்வாளர் கண்டறிந்தார்.

மேலும் ஒரு சான்றாக, பெரும்பாலான சமூக ஊடகங்களில் கொரோனாவினால் பெண்கள் பாதிக்கப்பட்டால் என்ன விதமான பின்விளைவுகள் நிகழலாம் எனவும், இவ்வாறான தாக்கங்கள் வேறுநாடுகளில் மட்டுமல்ல இலங்கையிலும் என்பதாக, 'இது இந்தியாவில் இல்லை நமது லங்காவில்' என்ற தலைப்புடன் மக்களின் நம்பிக்கைக்குரிய சுகாதார அமைச்சகக் கிளை நிறுவனமொன்றின் வழியாக முகப்புத்தகத்தினூடாக காணொளி வடிவில் வெளியிடப்பட்டது. அக்காணொளியில் 19 வயதான பெண்ணொருவர் வலிப்பு நோயினால் அவதிப்படுவதைப்போல் உயிருக்குப் போராடும் நிலைமை காட்டப்பட்டதுடன், கொரோனா பெருந்தொற்றினாலேயே அந்தப் பெண் அவ்வாறு அல்லற்படுகிறார் எனவும் யாழ். சமூகத்தினர் உட்படப் பலராலும் பகிரப்பட்டு, இனந்தெரியாத பய உணர்வு மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டதனை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. ஆனால், அதன் பின்னர் அப்பெண்ணுக்குக் கொரோனா நோய்த் தொற்றுக் காணப்பட்டாலும், பயத்தினாலும், மனஅழுத்தத்தினாலும் ஏற்பட்ட மூச்சுத் திணறலே அந்த உடல்வெளிப்பாட்டிற்குக் காரணம் என்ற உண்மையான செய்தி வைத்தியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டது.

அஸ்ராசெனிக்கா தடுப்பூசியை முதற் தடவையாகச் செலுத்திக் கொண்டவர்கள் தமது இரண்டாவது தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதற்காக 1945 என்ற எண்ணுக்கு தொடர்பினை மேற்கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என முகப்புத்தகம், புலனம், வைபர் குழுக்களினூடாக பகிரப்பட்டது. ஆனால், அத்தகவல் பிழையானது எனவும், உண்மையாகவே அந்த குறிப்பிடப்பட்ட இலக்கமானது இலங்கை கடற்படைத் தளம் ஒன்றினது எனவும் ஆய்வாளரால் இனங்காணப்பட்டது.

அடுத்ததாக கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதனால் பெண்கள் மலட்டுத்தன்மையினை அடைவர், இருபாலாருக்கும் மரபணுக்களில் மாற்றம் ஏற்படலாம், மாரடைப்பு ஏற்படலாம் போன்ற விடயங்களை உள்ளடக்கிக் கேள்விக்குறியுடன் படத்தொகுப்புக்கள், மீம்ஸ்கள் மற்றும் தகவல்கள் பரிமாறப்பட்டதன் மூலம் மக்கள் மத்தியில் அச்சம் கலந்த நிலை தோற்றுவிக்கப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. அத்துடன் 'பைசர் கோவிட் - 19 தடுப்பூசி பெண்கள் கருவுறுவதைத் தடுக்குமா?' என்ற கேள்வியுடன் இன்றும் சமூக ஊடகங்கள்வழியாகப் படங்கள் பகிரப்படுவதனையும் ஆய்வாளரால் அவதானிக்க முடிந்தது. ஆயினும், இதற்கு மறுதலிப்பாக, கோவிட் - 19 தடுப்பூசியைப் பெற்ற பின்னர் பெண்களில் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும் அல்லது கருத்தடையாக அமையும் எனும் கருத்தை உலக சுகாதார ஸ்தாபனம் நிராகரித்துள்ளதுடன், அது பாதுகாப்பான தடுப்பூசியாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று விளக்கமளித்துள்ளதனையும் அவதானிக்க முடிந்தது.

மேலும், கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் எவரும் அவர்களின் மருத்துவத் தேவைக்கான மயக்கமருந்தினை (Anesthetics) உட்செலுத்த முடியாது எனவும் அது பூரணமாக இயங்காது எனவும் ஒரு தகவல் புலனத்தினூடாக அனைவருக்கும் பகிரப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. அதன் பின்னர், அத்தகவல் பொய்யானது எனவும் அவ்வாறான தகவலை சமூக ஊடகங்களின் மூலம் பகிர்வதன் மூலம் மக்களை பீதியடையச் செய்ய வேண்டாம் எனவும் மருத்துவ அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.

பிரான்ஸ் நாட்டினைச் சேர்ந்த வைரஸ் நோய்கள் தொடர்பான விஞ்ஞானி Luc Montagnier தெரிவித்ததாக ஒரு செய்தியொன்று மிக வேகமாக யாழ்ப்பாணத்திலும் சமூக ஊடகங்களில் பரப்பட்டது. அதாவது, கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்பவர்கள் மிக விரைவில் தமது மரணத்தினை எதிர்கொள்வார்கள் என்றும், மிகக் குறைந்தது இரண்டு வருடங்களுக்கிடையில் அவர்களது மரணம் நிகழும் எனவும் அவர் தெரிவித்திருந்தார் என்ற கருத்தானது பரப்பப்பட்டது.

ஆனால், இறுதியில் அந்த விஞ்ஞானியினால் அவ்வாறானதொரு தகவல் தெரிவிக்கப்படவில்லை என்பது பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதனையும் அவதானிக்க முடிந்தது.

கொரோனாத் தடுப்பூசி குறித்த இவ்வாறான பொய்யானதும் தவறானதுமான தரவுகளால், பெரும்பாலான யாழ்ப்பாண மாவட்ட மக்கள் தடுப்பூசிகளை ஏற்றுவது குறித்து பின்நின்றமையினையும், தடுப்பூசிகளை ஏற்றுவது குறித்து ஏனையோருக்கும் அச்சத்தினை உண்டுபண்ணி அதிலிருந்து விலகச் செய்தமையையும் ஆய்வாளரால் அவதானிக்க முடிந்தது.

இங்கு கருத்துருவாக்கத் தலைவர்கள் (Opinion Leaders) முக்கிய இடத்தினை வகிக்கின்றனர். அதாவது, வெகுசனங்கள் ஊடாக முன்வைக்கப்படும் செய்திகள் சாதாரண பொதுமக்களை / பெறுநர்களை சென்றடையும் வழிமுறை பற்றி போல் லாசர் ∴பெல்ட் (Paul Lazarsfeld), பேர்னாட் பெரெல்சென் (Bernard Berelson), ஹாசெல் கௌடெட் (Hazel Gaudet) ஆகியோரினால் 1944ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட ஓர் ஆய்வறிக்கையின் முடிவு தகவற் பரவலின் இருபடி நிலையை (Two step flow) எடுத்துக்கூறுகின்றது. இந்த வகையில் ஊடகச் செய்திகளை நுகரும் பெறுநர்களை இக் கோட்பாட்டினூடாகக் கருத்தியல் உருவாக்குநர்கள் மற்றும் பின்பற்றுபவர்கள் என இரண்டாகப் பார்க்க முடியும். அவற்றில், முதல் நபர்கள் ஊடகச் செய்திகளுடன் தமது கருத்தியல்களையும் இணைத்து, செய்திகளை ஊடுகடத்தும் முறையின் அடிப்படையில் கருத்தியல் உருவாக்குநர்கள் / கருத்தியல் தலைவர்களாக (Opinion Makers / Opinion Leaders) உருவாகினர். அவர்களால் வழங்கப்படும் செய்திகளை அவ்வாறே ஏற்றுக்கொண்டு, அதனைப் பின்பற்றுபவர்கள் கருத்தியல் பின்பற்றுநர்கள் (Opinion Followers) என அழைக்கப்பட்டனர்.

இன்றைய சமூகத்தில், ஆன்மீக தலைவர்கள், அரசியல்வாதிகள், ஆசிரியர்கள் போன்று சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்டிருப்பவர்கள் தாம் நுகரும் ஊடகச் செய்திகளுடன் தமது கருத்துகளையும் இணைத்து, சாதாரண பொதுமக்களுக்கு முன்வைத்து வருவதை இன்றும் அவதானிக்க முடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவர்கள் கருத்துருவாக்குநர்களாக அடையாளம் காணப்படுவதுடன், இவர்களின் கருத்துக்கள் சாதாரண பொதுமக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருவதனை அவதானிக்க முடியும்.

இந்தவகையில் இவ்வாறு கருத்துருவாக்க தலைவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டு ஊடகச் செய்திகளை பெற்றுக்கொள்ளும் முறைமையானது ஊடக விளங்கறிவு பற்றிய புரிதலில் அதிகமாக பாதிப்பை செலுத்துவதையும், தகுந்த ஊடக விளங்கறிவின் மூலமே இவ்வாறு கருத்துருவாக்கத் தலைவர்கள் தமது சொந்த ஆதாயங்களுக்காகக் கையாளும் செய்திகளை வேறு பிரித்து அறிந்து ஊடகச் செய்திகளை சரியாகக் கட்டுடைத்து வரும் தன்மையை சாதாரண பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

## 2.5 பயணக் கட்டுப்பாடுகள் தொடர்பான செய்திகளை வெளியிட்டதில் போலிச் செய்திகள்

கொரோனா காலத்தில் நாட்டில் அமுலில் இருந்த பயணக்கட்டுப்பாடுகள் தொடர்பில் தவறான தகவல்கள் உத்தியோகபூர்வ ஊடக நிறுவனங்களை மேற்கோள் காட்டி சமூக ஊடகக் குழுக்களினூடாகவும் சாதாரண தொலைபேசி குறுஞ்செய்திகளினூடாகவும் பரப்பப்பட்டன. அதாவது "நாட்டில் தொடர்ந்து வரும் அதிகரித்த கொரோனா இறப்புக்களின் காரணமாக தற்போது அமுலிலுள்ள பயணக்கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்" என்ற இச்செய்தியே பல தடவைகள் பரப்பப்பட்டு பின்னர் அச் செய்திகள் போலியானவை என

அச்செய்தித் தளங்கள் அறிவித்ததுடன், தம்மால் அச் செய்திகள் பகிரப்படவில்லை எனவும் தெரிவித்திருந்தமை ஆய்வாளரால் அவதானிக்கப்பட்டதொன்றாகும்.

ஏற்கனவே உத்தியோகபூர்வத் தளங்களினால் வெளியிடப்பட்ட பயணக்கட்டுப்பாட்டுத் திகதிகள் நெருங்கி வருகின்ற வேளையில், அடுத்த உத்தியோகபூர்வ அறிவிப்புக்களுக்கு முன்னராகவே, இன்னும் ஒரு மாதத்திற்கு பயணக் கட்டுப்பாடு தொடரலாம், அடுத்த மாதமும் ஊரடங்கா? போன்ற கேள்விகளை உள்ளடக்கி, சமூக ஊடகங்களில் மீம்ஸ்கள் உருவாக்கப்பட்டு பகிரப்பட்டு வந்ததனையும் அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான தகவல்களால் மக்களால் தமக்கு அவசியமான செயற்பாடுகளைச் சரியாகத் திட்டமிட முடியாத நிலை ஏற்பட்டதுடன், அவர்கள் மிகுந்த மனவுளைச்சலுக்கு ஆளாக நேரிட்டதனையும் அவதானிக்க முடிந்தது. அத்துடன், பகிரப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்கள் பொய்யானவை என இனங்காணப்படும் சந்தர்ப்பத்தில் அவை தொடர்பில் வரும் எந்தவொரு செய்தியையும் நம்ப மறுக்கின்ற மக்களின் மனநிலையையும் காணக்கூடியதாகவிருந்தது.

## 3. தொகுப்புரை

கொரோனாப் பெருந்தொற்றுக் காலங்களில் மக்களை ஏற்கனவே தொற்றுப் பாதிக்கும் என்ற அச்சம் ஆட்கொள்வதைப் போலவே, சமூக ஊடகங்களின் போலிச் செய்திகளும் அவ்வாறான ஆதிக்கத் தாக்கத்தினையே மக்களிடத்தே விதைக்கின்றன.

அத்துடன், இவ்வாறான போலிச் செய்திப் பரம்பலினால் அவற்றினை மட்டுப்படுத்தும் நோக்குடன் 'போலிச் செய்திகளைக் கடந்து.' (Beyond Fake News) என்ற திட்டத்தினை பிபிசி நிறுவனம் தொடங்கியது. இது குறித்து பிபிசி உலக சேவை குழுமத்தின் இயக்குநர் ஜெமி ஆங்கஸ் தெரிவிக்கும்போது, "போலிச் செய்தி அச்சுறுத்தல் குறித்து வெறுமனே பேசிக் கொண்டிராமல் அதை எதிர்கொள்வதற்கான உறுதியான நடவடிக்கைகளை பிபிசி உலக சேவைக் குழுமம் எடுத்துள்ளது " என்றார்.

கொரோனாப் பெருந்தொற்று காலத்தில் பகிரப்பட்ட / பரப்பப்பட்ட போலிச் செய்திகள் குறித்து ஏற்கனவே குறிப்பிட்ட ஐந்து செயன்முறை வரையறைகளுடாக நோக்குமிடத்து, கருதுகோளாக முன்வைக்கப்பட்டதை ஒத்து, பெறுநர்கள் - ஆதிக்கப் பெறுநர்கள், பேச்சுவார்த்தை/விமர்சனத்திற்குட்பட்ட பெறுநர்கள் மற்றும் எதிர்ப்புப் பெறுநர்கள் எனச் செயற்படுவது பகுதியளவில் நிரூபணமாகின்றது. அதனடிப்படையில், பெருந்தொற்றுக் காலத்தில் பெரும்பாலான யாழ்ப்பாணத்துச் சமூக மக்கள் மத்தியில் ஊடகங்களிலிருந்து வரும், குறிப்பாக, சமூக ஊடகங்களிலிருந்து வரும் செய்திகளை அவற்றின் உண்மைத்தன்மை குறித்து ஆராய்வதில் அவர்களின் ஊடக விளங்கறிவானது போதுமானளவில் காணப்படவில்லை என்பதுடன், வெளிவருகின்ற/பகிரப்படுகின்ற போலிச் செய்திகளையும் அவற்றின் உண்மைத்தன்மைகளை அறியாது அவ்வாறே ஏற்றுக் கொள்ளும் தன்மையும் அவதானிப்பின் பேரில் இனங்காணப்பட்டது என்றே கூறலாம்.

**உசாத்துணைகள்:**


*தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்:* ஆசிரியர் வழிகாட்டி (2018). மஹரகம, இலங்கை: தேசியக் கல்வி நிறுவகம்

*ஊடக மறுசீரமைப்புக்களுக்கான செயலகம்.* (2016). பொதுமக்கள் நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல், பன்னல, இலங்கை

Manfra, Meghan & Holmes, Casey. (2019). *Media Literacy and Fake News in the Social Studies.*

Jones - Jang, Mo & Mortensen, Tara. (2019). Does Media Literacy Help Identification of Fake News? Information Literacy Helps, but Other Literacies Don't. American Behavioral Scientist.

Collins, Botambu & Hoang, Dinh Tuyen & Nguyen, Ngoc Thanh & Hwang, Dosam. (2020). *Trends in combating fake news on social media – a survey.* Journal of Information and Telecommunication.

https://www.thehindu.com/news/international/covid-19-jaffna-reports-first case/article31136720.ece.

https://www.who.int/campaigns/connecting-the-world-to-combat-coronavirus/how-to-report-misinformation-online?gclid=Cj0KCQjw9O6HBhCrARIsADx5qCSwnDhpj-72FVuQFFumhYMrUs3azQrrqWEV8PCdNBdBL6tj7XdTGpUaAnuuEALw_wcB.

ads&utm_